தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்கள் அழகியல் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்வதில் பாடசாலைகளின் வகை மற்றும் பாலினம் செலுத்தும் செல்வாக்கு (மட்டக்களப்பு கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்ட அளவைநிலை ஆய்வு)

க.ஞானரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம்
திறந்த பல்கலைக்கழகம்
kgnan@ou.ac.lk

ஆய்வுச்சுருக்கம்:

பன்மைச் சமூகத்தைக் கொண்ட எமது நாட்டில் இன, மத, சாதி, பிரதேச, பாலின வேறுபாடின்றி மனிதரிடையே தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கு ''அழகியல் கலைகள்'' பாரிய பங்களிப்பைச் செலுத்தவல்லன. அத்துடன் தொடர்பாடல் திறன், இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன், தீர்மானம் எடுக்கும் திறன், முன்வைக்கும் திறன் போன்றவை விருத்திபெற்று சமநிலை ஆளுமை பொருந்திய மனிதனாக வாழ்வதற்கும் அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பிறரை மதித்தல், சகோதரத்துவம் போன்ற நற்குணங்களைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதிலும் அழகியல் கலைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. இத்தகைய முக்கியத்துவம் காரணமாக இலங்கையில் பாடசாலை கலைத்திட்டத்தில் அழகியல் கல்வி உள்ளடக்கப்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வியாகக் கருதப்படுகின்றன தரம் 6, 7, 8, 9 வகுப்புக்களில் மாணவர்கள் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றை கற்க வேண்டியது அவசியமாகும். 2007ஆம் ஆண்டில் அறிமுகஞ்செய்யப்பட்ட கலைத்திட்டத்தில் தரம் 10 இற்கு அனுமதி பெறும் மாணவர்கள் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சமயம் ஆகிய ஆறு மையப்பாடங்களுடன் மேலதிகமாக மூன்று விருப்புப் பாடங்களையும் தெரிவு செய்யவேண்டும். இவ் விருப்புப்பாடங்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ''அழகியல் பாடத்தொகுதியில்'' நடனம் , சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், இலக்கியநயம் ஆகிய ஐந்து பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் அதிக எண்ணிக்கையானோர் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்வதனைத் தவிர்த்து வருகின்றனர். இது அழகியல் கவின்கலை மேம்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பிரச்சனையாகும். இப்பிரச்சனையே இவ் ஆய்வு உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்தது. மட்டக்களப்பு கல்வி வலயத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்ட இவ் ஆய்வானது நான்கு சிறப்பு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இவ் ஆய்வில் அளவைநிலை ஆய்வு வடிவமும் அளவறி, பண்பறி ஆகிய அணுகு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் மொத்தமாக 65 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 1A , 1C , வகை II, வகைகளைச் சேர்ந்த 43 பாடசாலைகள் இலக்கு குடித்தொகையாகக் கருதப்பட்டுள்ளன. அழகியல் கலைப்பாடங்களைக் கற்பிக்கும் சிரேஷ்ட ஆசிரியர்கள் 20 பேர் நோக்க மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்துக்களும் நேர்காணல் படிவமும் ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டு துறைசார் நிபுணர்கள் மூலம் இக்கருவிகளின் நம்பகம், தகுதி என்பன உறுதிசெய்யப்பட்டுள்ளன. தரவுப்பகுப்பாய்வு நுட்பமாக நூற்றுவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பொருத்தமான இடங்களில் அட்டவணைகளும் வரைபுகளும் காட்டப்பட்டுள்ளன. மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள்

சங்கீதம், நடனம் மற்றும் சித்திரம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்வது மிகவும் குறைவானது என்பதும் இது தேசிய ரீதியுடன் ஒத்துச்செல்வதும் அத்துடன் மாணவர்களின் பாடத்தெரிவில் பாடசாலைகளின் வகைகள் கணிசமான இணைவையும், பாலினம் சுமாரான இணைவையும் கொண்டுள்ளமையும் ஆய்வு மூலம் அறியப்பட்டுள்ளது. சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களைத் தமிழ் மாணவர்கள் தவிர்ப்பதற்கான பல்வேறு காரணங்கள் இனங்காணப்பட்டு இக்கவின்கலைப் பாடத்தெரிவின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பொருத்தமான பல ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள் - அழகியல் கலைகள் , கவின் கலைகள் ,கலைத்திட்டம், பாடத்தொகுதி

அறிமுகம் :

பன்மைச் சமூகத்தைக் கொண்ட எமது நாட்டில் இன, மத, சாதி, பிரதேச, பாலின வேறுபாடின்றி மனிதரிடையே தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கு “அழகியல் கலைகள்” பாரிய பங்களிப்பைச் செலுத்தவல்லன. இதன் காரணமாக பாடசாலை கலைத்திட்டத்தில் நடனம், சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய நான்கு அழகியல் கலைப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இவ் அழகியல் கல்வியானது கற்பவருக்குத் திறன், ஆளுமை, உடற்பயிற்சி என்பனவற்றை விருத்தி செய்வதோடு மற்றவர்களுக்கும் மனநிறைவு, மகிழ்ச்சி என்பனவற்றையும் கொடுக்கின்றது. அத்துடன் பாடசாலைக் கல்வியில் மாணவரிடையே தொடர்பாடல் திறன், இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன், தீர்மானம் எடுக்கும் திறன், முன்வைக்கும் திறன் போன்றவை விருத்திபெற்று, சமநிலை ஆளுமை பொருந்திய மனிதனாக வாழ்வதற்கும் அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பிறரை மதித்தல், சகோதரத்துவம் போன்ற நற்குணங்களைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதிலும் அழகியல் கலைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இக்கலைகளினூடாக சமூக நீதியையும், இன ஒற்றுமையையும், விழுமிய எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தமுடியும். இயற்கை அனர்த்தங்கள், நோய்த் தொற்று, மன முரண்பாடுகள் ஏற்படும் சர்ந்தப்பங்களில் உள ஆற்றுகைக்கு அழகியல் கலைகள் பாரிய பங்களிப்பை வழங்கவல்லன. மேலும் அழகியல் கல்வியானது உடல் - உள விருத்திக்கு மாத்திரமல்ல ஆற்றுகைப்படுத்துவோரின் முக மலர்ச்சி, இளமை, அழகு, சுறுசுறுப்பு, நீண்ட ஆயுள் என்பனவற்றிற்கும் பங்களிப்புச் செய்யவல்லன என்பதனை பல உளவியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இடைநிலைக் கல்வியாகிய 6, 7, 8, 9 ஆம் தரங்களில் மாணவர்கள் அழகியல் கல்விப் பாடங்களாகிய நடனம், சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியது கட்டாயமானதாகும். இதனால் ஒவ்வொரு மாணவர்களும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ இவற்றில் ஏதோ ஒரு பாடத்தை கற்க வேண்டியுள்ளது. 2007 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தில் தரம் 10, 11 இல் மையப்பாடங்கள், தெரிவுப் பாடங்கள் என இரு பாடப்பிரிவுகள் அறிமுகஞ் செய்யப்பட்டன. மையப்பாடங்களாகக் கருதப்பட்ட தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, சமயம் ஆகிய ஆறு பாடங்களையும் அனைத்து மாணவர்களும் கட்டாய பாடங்களாகக் கற்க வேண்டும். அதேவேளை தெரிவுப்பாடங்கள் சமூக விஞ்ஞானத் தொகுதி, அழகியல் பாடத்தொகுதி, தொழினுட்ப பாடத்தொகுதி என மூன்று தொகுதிகளைக் கொண்டுள்ளது. தரம்

10 இற்கு அனுமதிபெறுகின்ற மாணவர்கள் இம் மூன்றில் ஏதேனும் ஒரு தொகுதியிலிருந்து ஒரு பாடத்தைத் தெரிவு செய்ய முடியும். இவ் ஆய்வுடன் தொடர்புபட்ட அழகியல் பாடத்தொகுதியில் நடனம் , சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய நான்கு கவின் கலைப் பாடங்களுடன் இலக்கியநயம் என்னும் ஐந்தாவது பாடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் அழகியல் பாடத்தொகுதியிலுள்ள ஐந்து பாடங்களில் இலக்கியநயம் எனும் பாடத்தைத் தவிர ஏனைய நடனம் , சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய நான்கு பாடங்களுக்கும் மாணவர்கள் எழுத்துப் பரீட்சைக்கு மேலதிகமாக செய்முறைப் பரீட்சையொன்றுக்கும் தோற்றவேண்டியது அவசியமென்பதும் இவ் ஆய்வுடன் தொடர்புபட்ட முக்கிய விடயமாகும். தேசிய ரீதியில் அதிக எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள் தரம் 10 இல் நடனம் , சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்வதனைத் தவிர்த்து வருவதனை பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அட்டவணை: 1

க.பொ.த.(சா/த) பரீட்சை (2015-2019)

தேசிய ரீதியில் அழகியல் தொகுதிப் பாடங்களுக்கு முதல் தடவையாகத் தோற்றிய பாடசாலை தமிழ் பரீட்சாத்திகளின் சதவீத விபரம்

ஆண்டு	தோற்றியோர் (1)	சங்கீதம் (2)	$\frac{(2)}{(1)} X100$	நடனம் (3)	$\frac{(3)}{(1)} X100$	நாடகமும் அரங்கியலும்(4)	$\frac{(4)}{(1)} X100$	இலக்கிய நயம்(5)	$\frac{(5)}{(1)} X100$
2015	63101	7488	11.9	2444	3.9	6644	10.5	22375	35.5
2016	65662	7802	11.9	2625	4.0	6751	10.3	22677	34.5
2017	67571	8165	12.1	2930	4.3	7023	10.4	23010	34.1
2018	66032	8795	13.3	2976	4.5	7825	11.9	23745	36.0
2019	66983	8505	12.7	2885	4.3	7470	11.2	26894	40.2

மூலம்: மதிப்பீட்டு அறிக்கை- 2015-2019, ஆய்வு அபிவிருத்திக் கிளை, பரீட்சைத் திணைக்களம்.

அட்டவணை: 1 இலிருந்து கருதப்பட்ட ஐந்து வருடங்களிலும் தேசிய ரீதியில் தமிழ் மாணவர்கள் நடனப் பாடத்திற்கு சுமார் 4 % ஆனோரும் சங்கீதம் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு சுமார் 10 % ஆனோரும் இலக்கிய நயம் எனும் பாடத்திற்கு சுமார் 35 % ஆனோரும் தோற்றியுள்ளனர். சித்திரப் பாடத்திற்கு சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களும் தோற்றுகின்ற காரணத்தினால் தமிழ் மாணவர்களின் விபரத்தை வேறுபிரித்து அறிய முடியவில்லை. அதிக எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள் அழகியல் கலைகளை ஆற்றுகைப்படுத்தக் கூடிய பாடங்களைத் தவிர்த்து வருவதனால் இம் மாணவர்களுக்கு அழகியல் கலை கல்வி தொடர்பான அறிவு மட்டுமல்ல கலாசார, பாரம்பரிய நடைமுறைகளையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பும் அற்றுப்போகின்றது. இது ஒரு முக்கிய பிரச்சினையாகக் கருதப்படுவதால் தரம் 10 இற்கு அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள் அழகியல் கவின் கலைப்பாடங்களைத் தவிர்ப்பதற்கான காரணங்கள் யாவை? இத்தெரிவில் பாடசாலைகளின்

வகை மற்றும் பாலினம் என்பன எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றன? என்பனவற்றைக் கண்டறிவதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

ஆய்வுப் பிரச்சினை :

தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே அழகியல் பாடத்தொகுதியிலிருந்து ஒரு பாடத்தைத் தெரிவு செய்யும் போது சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்கின்றனர்.

ஆய்வு நோக்கங்கள்:

1. தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்கள் அழகியல் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்வதில் தற்போதைய நிலையை அறிதல்.
2. க.பொ.த.(சா/த) பரீட்சையில் அழகியல் தொகுதிப் பாடங்களின் அடைவில் தற்போதைய நிலையைப் பரீட்சித்தல்.
3. தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்கள் அழகியல் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்வதற்கும் பாடசாலைகளின் வகை மற்றும் பாலினம் என்பனவற்றிற்கு இடையேயான தொடர்பைக் கண்டறிதல்.
4. தரம் 10 இற்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்கள் அழகியல் கலைப் பாடங்களைத் தெரிவு செய்வதனை தவிர்ப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து தெரிவுசெய்வதனை அதிகரிப்பதற்கான பொருத்தமான ஆலோசனைகளை முன்வைத்தல்.

ஆய்வின் வரையறை :

தேசிய ரீதியில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்திரம், இலக்கியநயம் ஆகிய பாடங்களுக்கு சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களும் தோற்றுவதால் தமிழ் இவ் ஆய்வானது மாணவர்கள் மாத்திரம் தோற்றுகின்ற நடனம், சங்கீதம் ஆகிய இரு பாடங்களிலேயே பிரதான கவனம் செலுத்துகின்றது.

ஆய்வு முறையியல்:

(i) **ஆய்வு வடிவம்** : சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கு மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படும் அளவைநிலை ஆய்வு வடிவமும் அத்துடன் அளவறி , பண்பறி ஆகிய அணுகு முறைகளும் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(ii) ஆய்வுப் பிரதேசம் : மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ''மட்டக்களப்புக் கல்வி வலயம்'' இவ் ஆய்வில் ஆய்வுப் பிரதேசமாகக் கருதப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இக்கல்வி வலயமானது செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் கல்வி கற்கின்ற பல தேசிய பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயமாகவும் விளங்குகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சின் வருடாந்த பாடசாலை தொகை மதிப்பு அறிக்கையின்படி இக் கல்வி வலயத்தில் மொத்தமாக 65 பாடசாலைகள் உள்ளன.

இவற்றுள் 1AB, 1C, வகை II, வகை III பாடசாலைகள் முறையே 10, 12, 21, 22 ஆகும்.

(iii) **மாதிரித் தெரிவு** : மட்டக்களப்பு கல்வி வலயத்தில் மொத்தமாகவுள்ள 65 பாடசாலைகளில் க.பொ.த.(சா/த) வகுப்புக்களைக் கொண்டுள்ள 43 பாடசாலைகளும் தரவு சேகரிப்பதற்காக இலக்கு குடித்தொகையாகக் கருதப்பட்டுள்ளதோடு அழகியல் கலைப் பாடங்களைக் கற்பிக்கின்ற 20 சிரேஸ்ட ஆசிரியர்கள் நோக்கமாதிரி அடிப்படையில் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(iv) **ஆய்வுக் கருவிகளும் பகுப்பாய்வு நடைமுறையும்:** தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுடன் தொடர்புபட்ட தரவுகளை மட்டக்களப்பு கல்வி வலயத்திலிருந்து சேகரிப்பதற்காக மூன்று வெவ்வேறு வினாக் கொத்துக்களும், அழகியல் கல்வி ஆசிரியர்களிடம் தரவுகள் சேகரிப்பதற்காக நேர் காணல் படிவமும் ஆய்வாளரினால் தயாரிக்கப்படடுள்ளன. இவ் ஆய்வுக் கருவிகளின் நம்பகம், தகுதி என்பன இரு துறை சார் நிபுணர்கள் மூலம் உறுதி செய்யப்பட்டன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு நூற்றுவீதம் பயன்படுத்தபபட்டுள்ளது. அதே வேளை நோக்கங்களுக்கு அமைவாக தரவுகள் பொருத்தமான அட்டவணைகளாகவும் வரைபுகளாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தரவு பகுப்பாய்வும் அனுமானங்களும்:

ஆய்வு நோக்கம்- 1

க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தேசிய ரீதியில் அதிக எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய மூன்று பாடங்களையும் தவிர்த்து வருகின்றமை இவ் ஆய்வின் அறிமுகத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலைமை ஆய்வுப் பிரதேசமாகக் கருதப்படும் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் எவ்வாறு உள்ளது என்பதனை அறிவதனையே முதலாவது நோக்கமாக இவ் ஆய்வு கொண்டுள்ளது.

அட்டவணை : 2

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில்
அழகியல் தொகுதிப் பாடங்களிற்கு தோற்றியோர் விபரம்

ஆண்டு	தோற்றியோர் (1)	சங்கீதம் (2)	$\frac{(2)}{(1)} X100$	நடனம்(3)	$\frac{(3)}{(1)} X100$	நாடகமும் அரங்கியலும் (4)	$\frac{(4)}{(1)} X100$	தமிழ் இலக்கியந (5)	$\frac{(5)}{(1)} X100$	சித்திரம்(6)	$\frac{(6)}{(1)} X100$
2016	1943	249	12.8	106	5.5	742	38.2	412	21.2	288	14.8
2017	1959	237	12.1	104	5.3	844	43.1	375	19.1	245	12.5
2018	1805	277	15.3	125	6.9	929	51.5	399	22.1	229	12.7
2019	1797	215	12.0	85	4.7	959	53.4	510	28.4	174	9.7

மூலம்: வலயக்கல்வி அலுவலகம் , மட்டக்களப்பு

இவ் அட்டவணையிலிருந்து கருதப்பட்ட நான்கு வருடங்களிலும் சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், இலக்கிய நயம் ஆகிய பாடங்களை முறையே சுமார் 12% , 5% , 12%,40%, 20% ஆனோர் தெரிவு செய்திருப்பதனை அறியமுடிகின்றது. இதிலிருந்து நடனப்பாடத்தை மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களும் சங்கீதம் மற்றும் சித்திரம் ஆகிய இரு பாடங்களையும் குறைந்த எண்ணிக்கையானவர்களும் நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்தை அதிகமானவர்களும் தெரிவு செய்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இந்நிலைமை தேசிய ரீதியுடன் நேரான இணைவைக் கொண்டிருப்பதனை அட்டவணை 3 மேலும் தெளிவாக்கின்றது.

அட்டவணை: 3

தேசிய ரீதியிலும் மட்டக்களப்பு கல்வி வலய ரீதியிலும்

க.பொ.த (சா/த) பரீட்சையில் அழகியல் தொகுதிப் பாடங்களிற்கு தோற்றியோர் விபரம்

ஆண்டு	க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றியோரின் சதவீதங்கள்							
	சங்கீதம்		நடனம்		நாடகமும் அரங்கியலும்		இலக்கிய நயம்	
	தேசியம்	வலயம்	தேசியம்	வலயம்	தேசியம்		தேசியம்	வலயம்
2016	11.9	12.8	4.0	5.5	35.5	38.2	10.5	21.2
2017	12.1	12.1	4.3	5.3	34.5	43.1	10.3	19.1
2018	13.3	15.3	4.5	6.9	34.1	51.5	10.4	22.1
2019	12.7	12.0	4.3	4.7	36.0	53.4	11.9	28.4

மூலம்: மதிப்பீட்டு அறிக்கை- 2015-2019,ஆய்வு அபிவிருத்திக் கிளை, பரீட்சைத் திணைக்களம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம் , மட்டக்களப்பு

ஆய்வு நோக்கம்- 2

தமிழ் மாணவர்கள் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களைத் தவிர்ப்பதற்கு இப்பாடங்கள் " கடினமானவை" என்பதும் இப்பாடங்களில் "A சித்தி பெறமுடியாது" என்பதும் இரு காரணிகளாக இருக்க வாய்ப்புள்ளது. இவ் இரு காரணிகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையுமாகும். இதனை ஆராய்ந்து பார்ப்பதே இவ் ஆய்வின் இரண்டாவது நோக்கமாகும்

அட்டவணை: 4

க.பொ.த.(சா/த) பரீட்சை (2015-2019)

தேசிய ரீதியில் அழகியல் தொகுதிமற்றும் தமிழ்மொழிப் பாடங்களுக்கு முதல் தடவையாகத் தோற்றிய பாடசாலை தமிழ் பரீட்சார்த்திகள் சித்தி பெற்ற சதவீதங்களின் விபரம்

பாடங்கள்	2015		2016		2017		2018		2019	
	A	P	A	P	A	P	A	P	A	P
தமிழ் மொழி	8.8	81.0	9.2	78.6	21.5	88.7	13.0	90.1	9.3	87.1
சங்கீதம்	11.0	90.4	20.9	96.6	23.5	96.4	28.9	96.8	18.3	95.4
நடனம்	34.5	97.7	29.1	97.3	32.7	96.9	25.2	97.6	21.4	95.7
நாடகமும் அரங்கியலும்	13.2	98.2	12.4	98.7	10.7	97.4	16.1	97.7	14.0	97.5
இலக்கிய நயம	17.2	72.3	39.3	95.0	37.0	89.5	16.3	82.5	25.1	86.4

மூலம்: மதிப்பீட்டு அறிக்கை- 2015-2019,ஆய்வு அபிவிருத்திக் கிளை, பரீட்சைத் திணைக்களம்

இங்கு A - A சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள்
P - சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள்

இவ் அட்டவணையிலிருந்து நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய மூன்று பாடங்களிலும் சுமார் 95% ஆனோர் சித்தி பெற்றுள்ளதனை அறிய முடிகின்றது. மையப்பாடமாகவும் தாய்மொழியாகவும் கருதப்படுகின்ற தமிழ் மொழிப்பாடத்தின் சித்தி சதவீதத்திலும் இது உயர்வாக இருப்பதும் இங்கு குறிப்பிடக் கூடிய முக்கிய அம்சமாகும். அத்துடன் நடனப் பாடம் சுமார் 100% சித்தியைக் கொண்டிருப்பதும் விசேடமாகும். அதேவேளை மையப்பாடங்கள் உட்பட அனைத்துப் பாடங்களுடனும் ஒப்பீடு செய்யும்போது நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களின் சித்தி சதவீதம் மிகவும் உயர்வாக இருப்பதனையும் பரீட்சைத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் மேலும் வெளிப்படுத்துகின்றன.

இவற்றில் இருந்து நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்வதில் ''பாடங்கள் கடினம்'' என்ற காரணி நிராகரிக்கப்படுகின்றது. அத்துடன் இப்பாடங்களில் A சித்தி பெற்றவர்களின் சதவீதமும் ஏனைய பாடங்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதனையும் விசேடமாக நடனப்பாடத்தில் வருடாந்தம் சுமார் 30% ஆனோர் A சித்தி பெற்றுவருவதனையும் இவ் அட்டவணை மேலும் தெளிவுபடுத்துகின்றது. இதிலிருந்து இப்பாடங்களைத் தெரிவு செய்வதனால் ''A சித்தி பெறமுடியாது'' என்ற கருத்தும் நிராகரிக்கப்படுகின்றது.

இத்தகைய தேசிய நிலைமையுடன் மட்டக்களப்பு கல்வி வலயத்தின் நிலைமையும் இணைந்து செல்வதனை அட்டவணை 5 மேலும் தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 5

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் அழகியல் தொகுதிப் பாடங்களில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள் தொடர்பான விபரம்

	ஆண்டுகள்			
பாடம்	2016	2017	2018	2019
சங்கீதம்	96.4%	97.9%	98.9%	97.7%
நடனம்	97.2%	94.2%	99.2%	100%
நாடகமும் அரங்கியலும்	99.6%	99.5%	99.1%	98.4%
தமிழ் இலக்கியநயம்	86.4%	90.9%	86.5%	89.2%
சித்திரம்	46.9%	75.1%	88.6%	81.6%

மூலம்: வலயக்கல்வி அலுவலகம் , மட்டக்களப்பு

ஆய்வு நோக்கம்- 3

சமகாலத்தில் பாடசாலைகள் 1AB,1C,வகைII,வகைIII என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் வகை III பாடசாலைகள் தரம் 5 அல்லது தரம் 9 வரையான வகுப்புக்களையே கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக இவ் ஆய்வில் வகை III பாடசாலைகள் உள்ளடக்கப்படவில்லை. 1AB என்பது அதிகூடிய மாணவர்களைக் கொண்டிருப்பதோடு மிகவும் வசதியான பாடசாலைகளுமாகும். இதேபோல் 1C , வகை II பாடசாலைகள் என்பன கிராமப்புறங்களில் குறைவான மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகளாகும். குறிப்பாக 1C , வகை II பாடசாலைகளில் கமம், விவசாயம், சுயதொழில், கூலித்தொழில் செய்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகளே அதிக எண்ணிக்கையில் கற்பதற்கு வாய்ப்புள்ளது. இதன் காரணமாக பாடசாலைகளின் வகைகளுக்கும் பெற்றோரின் குடும்ப சூழலுக்கும் இடையில் ஓரளவான தொடர்பும் உண்டு.

தரம் 10 இற்கு அனுமதி பெறும் மாணவர்கள் அழகியல் பாடத்தொகுதியில் இருந்து பாடங்களை தெரிவு செய்வதில் பாடசாலைகளின் வகை, பாலினம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பதனை அறிவது இவ் ஆய்வில் மூன்றாவது நோக்கமாகும்.

பாடத் தெரிவில் பாடசாலைகளின் வகையின் செல்வாக்கு.

தரம் 10 இற்கு அனுமதி பெறும் மாணவர்கள் அழகியல் பாடத்தொகுதியில் இருந்து பாடங்களைத் தெரிவு செய்வதில் பாடசாலைகளின் வகை எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றன என்பதனை உரு 1 வெளிப்படுத்துகின்றது.



உரு 1 பாடத்தெரிவின் சதவீதங்களுக்கும் பாடங்களுக்கும் இடையிலான தொடர்பு

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட 1AB , 1C , வகை II பாடசாலைகளில் இருந்து அழகியல் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்தவர்களின் சதவீதங்கள் பாடரீதியாக உரு 1 இல் காட்டப்பட்டுள்ளன. இவ்வரைபில் இருந்து பின்வரும் முடிவுகளை அறிந்து கொள்ளமுடியும்.

1. அனைத்து வகைப்பாடசாலைகளிலும் இருந்தும் நடனத்தைத் தெரிவு செய்தவர்களின் சதவீதங்கள் மிகவும் குறைவானதாகும். 1AB பாடசாலைகளில் இது சுமார் 4% ஆகவும் 1C பாடசாலைகளில் சுமார் 2% ஆகவும் 1 C பாடசாலைகளில் சுமார் 1% ஆகவும் உள்ளது.
2. சங்கீதப் பாடத்தை 1AB பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் சுமார் 7 % ஆனோரும் அதே வேளை 1C , வகை II பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் சுமார் 3% ஆனோர் தெரிவு செய்துள்ளனர்.
3. தமிழ் இலக்கிய நயம் எனும் பாடத்தை 1AB பாடசாலைகளிலே மிகவும் அதிகமானோர் தெரிவுசெய்கின்றனர். இது சுமார் 18% ஆக அமைந்துள்ளது. 1C மற்றும் வகை II பாடசாலைகளில் சுமார் 2% ஆனோரே இப் பாடத்தைத் தெரிவு செய்துள்ளனர்.
4. சித்திரப்பாடத்தை 1AB பாடசாலைகளில் இருந்து சுமார் 7% ஆனோரும், 1C பாடசாலைகளில் இருந்து சுமார் 2% ஆனோரும், வகை II பாடசாலைகளில் இருந்து சுமார் 1% ஆனோரும் தெரிவு செய்துள்ளனர்.
5. நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்தை மூன்று வகைப் பாடசாலைகளிலும் இருந்தும் அதிகமானவர்கள் தெரிவு செய்கின்றனர். அத்துடன் 1AB பாடசாலை மாணவர்களே மிகவும் அதிகமாக தெரிவு செய்துள்ளனர்.

இவற்றில் இருந்து மூன்று வகைப்பாடசாலைகளிலும் இருந்தும் ‘‘நாடகமும் அரங்கியலும்’’ எனும் பாடத்தை அதிகமான மாணவர்கள் தெரிவு செய்கின்றனர் என்பது புலனாகின்றது. மேலும் தமிழ் இலக்கிய நயப் பாடத்தை தெரிவு செய்வதில் 1AB பாடசாலை மாணவர்கள் ஏனைய வகைப் பாடசாலை மாணவர்களை விட அதிகமாக உள்ளனர்.

பாடத் தெரிவில் பாலினத்தின் செல்வாக்கு

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பயிலும் தமிழ் மாணவர்கள் தரம் 10 இற்கு அனுமதிக்கப்படும்போது அழகியல் பாடத்தெரிவில் பாலினம் செலுத்தும் செல்வாக்கினை அறிவதற்காக வலயத்திலிருந்து பெறப்பட்ட 2021, 2020, 2019 ஆண்டுகளுக்கான தரவுகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக சலாகை வரைபுகள் வரையப்பட்டுள்ளன. இவ் வரைபுகள் பாலினத்திற்கும் பாடத்தெரிவின் சதவீதத்திற்குமான தொடர்பை வெளிப்படுத்துகின்றன.



உரு- 2 பாடத் தெரிவின் சதவீதத்திற்கும் பாலினத்திற்குமிடையேயான தொடர்பு

இவ் உரு 2 இலிருந்து பின்வரும் விடயங்களை அறிந்து கொள்ளமுடிகின்றது

1. நடனப் பாடத்தை தெரிவு செய்துள்ளவர்களில் மிகவும் அதிகமானவர் பெண்கள். 0.5 % இலும் குறைவான ஆண்களே இதனைத் தெரிவு செய்கின்றனர்.
2. சங்கீதப் பாடத்தினை அதிகமான பெண்களும் குறைவான ஆண்களும் தெரிவு செய்துள்ளனர்.
3. தமிழ் இலக்கியநயப் பாடத்தை ஆண், பெண் இரு பாலாரும் தெரிவு செய்கின்ற போதிலும் பெண்களே அதிகமாகத் தெரிவு செய்துள்ளனர்.
4. சித்திரப் பாடத்தெரிவில் ஆண்களின் ஆதிக்கம் மிக அதிகமாகவுள்ளது.
5. நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்தை இரு பகுதியினரும் ஓரளவு சம அளவில் தெரிவு செய்துள்ளனர்.

இவற்றிலிருந்து ஆண் மாணவர்கள் மிக அதிகமாக நடனப்பாடத்தையும், அதிகமாகச் சங்கீதப்பாடத்தையும் தவிர்த்து வருவதனையும், சித்திரப் பாடத்தை பெண்கள் அதிகமாக தவிர்த்து வருவதனையும் அறியமுடிகின்றது. இவற்றிலிருந்து பாடத்தெரிவில் பாலினம் கணிசமான பங்களிப்பைச் செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. இது ஆரோக்கியமானதல்ல. கல்விச் சமூகம் எதிர்பார்ப்பது போன்று பாடத்தெரிவில் தேசிய, மாவட்ட, வலய, பாடசாலை ரீதியிலும் பாலின சமத்துவம் பேணப்பட வேண்டியது இன்றியமையாததவையாகும்.

ஆய்வு நோக்கம்- 4

அழகியல் பாடத்தைக் கற்பிக்கும் நிபுணத்துவம் கொண்ட சிரேஷ்ட ஆசிரியர் இருபது பேரிடம் நேர்காணல் மூலம் பெறப்பட்ட முடிவுகள் இங்கு தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இம் மூன்று பாடங்களையும் தமிழ் மாணவர்கள் பாடத்தெரிவின் போது தவிர்த்து வருவதற்கு இவ் ஆசிரியர்களால் பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்- மாணவர் சார்பானது

1) **பெற்றோர்களின் எதிரான மனப்பாங்கு** : நடனம், சங்கீதம் மற்றும் சித்திரம் ஆகிய பாடங்கள் தொடர்பாக பெற்றோரின் எதிரான மனப்பாங்கு
2) **பொருளாதாரப் பிரச்சனை:** நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களைக் கற்பதாயின் இசைவாத்தியங்கள், உடை என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கு அதிகமான பணம் செலவு செய்யவேண்டி இருப்பதால், வசதி குறைந்த பெற்றோர்கள் இதனை மேலதிக சுமையாகக் கருதுகின்றனர்.
3) **மாணவர்களின் எதிர்காலம் தொடர்பான பயம்** : நடனம் மற்றும் சங்கீதம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்கள் பாடசாலைகளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஆயத்தம் செய்து ஆற்றுகைப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. இதனால் மேலதிக உழைப்பு, பணச்செலவு, நேரவிரயம், மன அழுத்தம் என்பன ஏற்படும் என

பெற்றோாகள் கருதுகின்றனர். இதன் காரணமாக தம் பிள்ளைகள் மையப்பாடங்களில் கவனஞ் செலுத்த முடியாமல் போய்விடும் என்று பயம் கொள்ளுகின்றனர்.

4) **மாணவர்கள் பருவமடைதலும் உடல் சுகயீனம் பெறலும்** : பெண் பிள்ளைகள் பருவமடைந்த பின்னர் தொடர்ச்சியாக இதில் ஈடுபடமுடியாது என பெற்றோர் கருதுகின்றனர். அத்துடன் மேடை நிகழ்வுகளில் வயது வந்த பெண் பிள்ளைகள் பங்கேற்பதனை சில பெற்றோர்கள் விரும்புவதில்லை. சமூகத்தின் எதிரான மனப்பாங்கு இதற்குக் காரணம் என பெற்றோர் நினைக்கின்றனர்.

அத்துடன் ஆண் மாணவர்கள் பருவமடையும்போது குரல், உடல் நிலைகளில் பாரிய மாற்றம் ஏற்படும். இதனால் பாடுவதிலும் மேலாடை இன்றி நடனம் ஆடுவதிலும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

பாடங்கள் சார்பானது

1) **பாடச்சுமை** : சங்கீதம் , நடனம், சித்திரம் ஆகிய பாடங்களில் பாடப்பரப்பு மிக அதிகமாகவும் கற்பித்தலுக்காக ஒதுக்கப்பட்ட பாட வேளை மிகவும் குறைவாகவும் உள்ளது. அத்துடன் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் சமஸ்கிருத ஆதிக்கம் கூடுதலாகவும் அமைந்துள்ளது. இதனால் விடய விளக்கமின்றி முழுமையாக மனனஞ் செய்யவேண்டிய நிலை அதிகமாகவுள்ளது. இதற்கு மாணவர்கள் பயப்படுகின்றனர்.

2) **செய்முறைப் பரீட்சை** : நடனம், சங்கீதம் ஆகிய இரு பாடங்களுக்கும் எழுத்துப் பரீட்சைக்கு மேலதிகமாக செய்முறை பரீட்சை ஒன்றுக்கும் மாணவர்கள் தோற்றவேணடியுள்ளது. செய்முறைப் பரீட்சையில் தனியாக ஒப்புவிப்பதற்கு மாணவர்கள் பயப்படுவதுடன் பதகளிப்பும் கொள்கின்றனர். அத்துடன் பரீட்சகரின் அகவயத்தன்மை பரீட்சை முடிவில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனவும் மாணவர் கருதுகின்றனர். அத்துடன் எழுத்துப் பரீட்சை நடைபெற்று நீண்ட காலத்தின் பின்னர் செய்முறை பரீட்சை நடைபெறுவதனால் பலர் செய்முறை பரீட்சைக்கு தோற்ற முடியாத சர்ந்தப்பங்களும் அதிகமாகவுள்ளன. மாணவர்களின் உடல்நிலை, குடும்ப சூழல், இயற்கை சூழல், நோய் தொற்று போன்றவை காரணங்களாக அமைகின்றன.

3) **பிரத்தியேகக் கல்விக்கான வாய்ப்பு குறைவு** : மையப்பாடங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பாடசாலையிலும் சமூகத்திலும் இப் பாடங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை எனவும் பிரத்தியேகக் கல்விக்கான வாய்ப்பு மிகக்குறைவு எனவும் மாணவர்களும் பெற்றோர்களும் கருதுகின்றனர்.

ஆசிரியர் சார்பானது

1) **பாட ஆசிரியர்களின் பற்றாக்குறை** : அதிகமான பாடசாலைகளில் சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர். அதிக மாணவர் எண்ணிக்கை கொண்ட சில 1AB பாடசாலைகளிலும் ஒரு நடன

அல்லது சங்கீத ஆசிரியர்களே உள்ளனர். மேலும் சித்திரப் பாடத்திற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மிகவும் குறைவாகும்.

2) **ஆசிரியர்களின் கடினப் போக்கு** : சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றனர். இதனால் மாணவர்கள் இப்பாடங்களை வெறுக்கின்றனர்.

3) **ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்திக் குறைபாடு** : இப் பாடங்களைக் கற்பிக்கும் அதிகமான ஆசிரியர்கள் தொழில்வாண்மைத் தகைமை இன்றி கடமையாற்றுகின்றனர். இதனால் கல்வி உளவியல், தொழில்நுட்பம் என்பனவற்றின் பயன்பாட்டில் திருப்தியின்மை காணப்படுகின்றது. அத்துடன் இவ் ஆசிரியர்களில் பலர் நவீன தொழினுட்பங்களை இப்பாடங்களுக்கு பயன்படுத்த முடியாது எனவும் கருதுகின்றனர்.

4) **பௌதிக வளப் பற்றாக் குறை** :சில பாடசாலைகளில் தனியான செயற்பாட்டறை, தளபாடங்கள், மின்சாரவசதி மற்றும் இசைக்கருவிகள் என்பனவற்றில் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதன் காரணமாகவும் மாணவர் இப்பாடங்களைத் தெரிவு செய்வதில்லை.

ஆய்வு முடிவுகள்:

1. சங்கீதம், நடனம் ஆகிய இரு பாடங்களையும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள் தெரிவு செய்கின்றனர்.

2. சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களின் தெரிவில் தேசியம் , வலயம் என்பனவற்றிற்கிடையே ஒத்த தன்மை காணப்படுகின்றது. நாடகமும் அரங்கியலும், இலக்கிய நயம் ஆகிய இரு பாடங்களின் தெரிவில் வலயமானது தேசிய ரீதியை விட மிக அதிகமாகவுள்ளது.

3. க.பொ.த(சா/த) பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களின் அடைவு மிக உயர்வானதாகும். தமிழ் மாணவர்கள் ஏனைய பாடங்களைவிட அழகியல் கலைப்பாடங்களிலே கூடிய A சித்தி பெறுகின்றனர். அதிலும் நடனப்பாடத்தில் அதிகூடிய A சித்தி பெறுகின்றனர்.

4. அழகியல் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்வதில் பாடசாலைகளின் வகை கணிசமான பங்களிப்பையும் பாலினம் சுமாரான பங்களிப்பையும் செலுத்துகின்றது.

ஆலோசனைகள்:

1. பாடசாலைகளில் தரம் 9 ஐ நிறைவு செய்த மாணவர்களுக்கு பாடத்தெரிவு தொடர்பாக மிகவும் பொருத்தமான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடாத்துதல்.
2. பாடசாலைக் கலைத்திட்டத்தில் இப்பாடங்களை கட்டாயமாக்குதல்.
3. நடனம், சங்கீதம் பாடங்கள் தொடர்பாக பெற்றோர்கள் கொண்டுள்ள எதிரான மனப்பாங்கை மாற்றியமைப்பதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல்.
4. வசதி குறைந்த மாணவர்களுக்கு இப்பாடங்களில் ஏற்படும் செலவுகளை பாடசாலைச் சமூகம் அல்லது நலன்விரும்பிகள் ஏற்றுக் கொள்ளுதல் மூலம் இத்தகைய மாணவர்களையும் ஊக்குவிப்பு செய்யமுடியும்.
5. அதிபர்கள் இப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை கௌரவப்படுத்துவதோடு மாணவர்களின்

ஆர்வத்தை அதிகரிப்பதற்கான பல்வேறு உத்திகளைக் கையாளளுதல்.

6. ஆசிரியர்கள் தமது பாடப்புலமை, வாண்மைத்துவ புலமை என்பனவற்றை விருத்தி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
7. மாணவர்களுடன் மிகவும் அன்பாகவும் சிநேகபூர்வமாகவும் நடந்துகொள்ளுதல்.
8. எழுத்துப் பரீட்சை முடிவடைந்து குறிகிய காலத்தில ் செய்முறைப் பரீட்சைகளை நடாத்துதல்

எதிர்கால ஆய்விற்கான முன்மொழிவுகள்:

இவ் ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால ஆய்விற்காக பின்வரும் விடயங்கள் முன்மொழியப்படுகின்றன.

1. சமகால COVID19 அசாதாரண சூழ்நிலைகளில் இவ் ஆய்வானது சில வரையறைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுப் பிரச்சனை தேசிய ரீதியில் விரிவாக ஆராயப்பட வேண்டும்.
2. க.பொ.த (உ/த) பரீட்சைக்கு கவின் கலைப் பாடங்களைத் தெரிவு செய்கின்ற மாணவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற பல்கலைக்கழக அனுமதி மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாக விரிவான ஆய்வு அவசியமாகும்
3. தரம் 10 இற்கு அனுமதிபெறும் தமிழ் மாணவர்கள், கவின் கலைப் பாடங்களைத் தெரிவு செய்வது தொடர்பாக க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை இலக்குக் குழுவாகக் கொண்டு ஓர் விரிவான ஆய்வு அவசியமாகின்றது.

முடிவுரை:

அழகியல் கல்விப் பாடத்தின் முக்கியத்துவம் அனைவரினாலும் உணரப்பட்டுள்ளது. பொதுவாக இப்பாடங்கள் தமிழ் கலாசாரத்துடன் இணைந்து செல்லக்கூடியவை. அத்துடன் ஒருவரின் மன ஆற்றுகைக்கு புத்துயிர் கொடுக்கக்கூடியவையுமாகும். இதன் காரணமாக மாணவர்கள் அழகியல் கலைப் பாடங்களைத் தெரிவு செய்வதனை ஊக்கப்படுத்த வேண்டியது கல்விச் சமூகத்தின் கடமையாகும். எமது தமிழ் காலாசாரத்தில் போற்றப்படும் அழகியல் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து இதனை விருத்தி செய்யவேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

உசாத்துணைகள்:

அழகியற் கல்வித் துறை.(2015). *ஆசிரியர் வழிகாட்டி* நிறுவகம்: தேசிய கல்வி நிறுவகம்,மகரகம

ஆய்வு அபிவிருத்திக் கிளை. (2015). *மதிப்பீட்டு அறிக்கை* : பரீட்சைத் திணைக்களம்.

ஆய்வு அபிவிருத்திக் கிளை. (2016). *மதிப்பீட்டு அறிக்கை* : பரீட்சைத் திணைக்களம்.

ஆய்வு அபிவிருத்திக் கிளை. (2017). *மதிப்பீட்டு அறிக்கை* : பரீட்சைத் திணைக்களம்.

ஆய்வு அபிவிருத்திக் கிளை. (2018). *மதிப்பீட்டு அறிக்கை* : பரீட்சைத் திணைக்களம்.

ஆய்வு அபிவிருத்திக் கிளை. (2019). *மதிப்பீட்டு அறிக்கை* : பரீட்சைத் திணைக்களம்.

புள்ளிவிபரவியல் கிளை. (2019). *பாடசாலைத் தொகைமதிப்பீட்டு அறிக்கை*:கல்வி அமைச்சு

கினிகே, ஐ. (2008).*புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும்*, பாதுக்கை: கல்வி வாண்மைத் தேர்ச்சி விருத்தி மையம்.